**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணககுகளைச் சமர்ப்பித்தல்

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் 6.5.1 பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 28 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையின் கணக்குகளுடன் கற்பிட்டி செயற்திட்டக் கிரயத்தை ஒருங்கிணைக்காத காரணத்திற்காக பின்னர் 2011 மே 31 இல் மீளப்பெறப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2011 யூன் 01 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்களைக் கொண்ட ரூபா 2,085,219,903 கூட்டுமொத்தத் தொகையான கணக்குகளின் 17 விடயங்கள் தொடர்பான விரிவான பட்டோலைகள் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த

பட்டோலைகள் 2011 செப்தெம்பர் 27 வரை காலத்திற்குக் காலம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த நடைமுறை, கணக்காய்வு மீளாய்வு மற்றும் பரிசோதனைகளை கிடைக்கத்தக்க பதவியணியினர் மற்றும் கணக்காய்வின் கால அட்டவணையின்படி, மட்டுப்படுத்துவதற்கு வழிகோலலாம்.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச் சட்டத்தின்படி, அதிகாரசபையின் பிரதான நோக்கம், நாட்டை சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிரயாணசேருமிடமாக அபிவிருத்தி செய்தலாகும். தேவைப்படும் நிதிகளில் 80% இற்கும் அதிகமாக அரசாங்கத்தினால் கப்பல்/விமான - மோதல் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரியினூடாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நட்டக் கடன்களிற்கான ஏற்பாடு 2 தொடக்கம் 4 ஆண்டுகள் வரை உள்ள கடன்பட்டோருக்காக கிடைக்க வேண்டியவைகளின் தன்மை மற்றும் அறவீட்டு நிலைமையைக் கருத்திற்கொள்ளாது 25% தொடக்கம் 100% வரையாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் அபிவிருத்திக் கிரயம் ஆண்டிற்கு 25% என்ற விகிதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தபோதிலும், அபிவிருத்திக் கிரயம் மற்றும் அவற்றின் தன்மையை இனங்காண்பதற்கான கணக்கீட்டுக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்)

-----------------------------------------------------------------------------------------

வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான முறையே ரூபா 15,918,750 மற்றும் ரூபா 7,252,357 ஆன தொகைகள் முன்னைய ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வழுக்களுக்கான திருத்தங்கள் என்றவாறு திரண்ட மிகைக் கணக்கிற்குத் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. எனினும், இந்த சீராக்கங்கள் இ.க.நி.10 இல் விதந்துரைக்கப்பட்ட திருத்த நடைமுறையின்படி, கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 53,890,268 தொகையான நீண்டகால முதலீடுகளின் உள்ளதன்மை மற்றும் பொருளாதார நன்மைகள் என்பன முதலிடப்பட்ட தொகைகளின் சட்பூர்வ ஆவணங்களின்மை மற்றும் நிச்சயமற்ற நிலைமை என்பற்றால் ஐயத்திற்கிடமானதாகும். எனினும், முதலீடுகளின் உண்மையான நிலைமையை வெளிப்படுத்தாது முதலீட்டு ஆதனமாக கணக்குகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா. 28,188,855 தொகையான முன்னரே கிடைத்த வருமானம் மற்றும் ரூபா 2,378,321 தொகையான கொடுபட வேண்டிய பெறுமதி சேர் வரி (வீஏரீ) என்பன கொடுபடவேண்டிய வைப்புக்களாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 2,098,797,951 ஆக இருந்தது. எனினும், பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்ட பெறுமதிகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபடவேண்டிய கணக்ககுள்

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின்படி, ரூபா 31,563,389 தொகையான வியாபாரக் கடன்பட்டோரில் ரூபா 13,679,315 ஆன தொகை 2 தொடக்கம் 3 ஆண்டுகள் வரை நிலுவையாக உள்ளன. மேலும், ரூபா 1,623,697 ஆன இன்னொரு தொகை 4 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையிலுள்ளது.

(ஆ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, ரூபா 2,381,826 தொகையான நானாவித கடன்பட்டோரில் சுமார் 75% உண்மையாக உள்ளனவல்ல எனினும், கணக்குகளிலிருந்து அவற்றைப் பதிவழிப்பதற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிடைக்கவேண்டியவைகளின் தன்மையைக் கருத்திற் கொள்ளமால் நட்டங்களிற்கான நிதி ஏற்பாடாக ரூபா 10,097,754 ஆன தொகை

மேற்கொள்ளப்பட்டிருந்தது. உதாரணமாக, 3 ஆண்டுகளிற்கு மேலாகக் திரண்டிருந்த ரூபா 16,556,353 தொகையான ஒரு பதிவு செய்யப்பட்ட ஹோட்டலிருந்து கிடைக்க வேண்டிய கடன்களிற்கு கடன்களை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்காது ரூபா 5,670,571 ஆன தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 1.6 கணக்குகளில் வித்தியாசங்கள்

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கணக்குகளின்படி, பின்வரும் நிறுவனங்களிற்கு அதிகாரசபையால் செலுத்தப்படவேண்டிய தொகைகளுக்கும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கணக்குகளிற்குமிடையில் ரூபா. 14,512,838 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

| நிறுவனம் | அதிகாரசபையின் கணக்குகளின்படி | சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின்படி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 70,576,634 | 60,809,294 | 9,947,340 |
| இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் | 43,948,356 | 43,433,205 | 515,151 |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 6,965,660 | 3,934,242 | 3,314,418 |
| இலங்கை மகாநாட்டு பணியகம் | 738,929 | இல்லை | 735,929 |

(ஆ) அதிகாரசபையின் கணக்குகள் மற்றும் பின்வரும் நிறுவனங்களின் கணக்குகள் என்பவற்றின்படி, கப்பல்/விமானம் ஏறும் வரி மற்றும் பொது மேன்தலைகள் தொடர்பாக இலங்கை மகாநாட்டு பணியகம் (எஸ்எல்சீபீ) மற்றும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (எஸ்எல்ஐரீஎச்எம்) என்பவற்றிடமிருந்து அதிகாரசபைக்குக் கிடைக்கவேண்டிய தொகைகளிற்கிடையில் ரூபா 86,512,880 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

| **நிறுவனம்** | **அதிகாரசபையின் கணக்குகளின்படி** | **சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின்படி** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| இலங்கை மகாநாட்டு பணியகம் | இல்லை | 23,779,840 | 23,779,840 |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் | 6,967,785 | 69,700,825 | 62,733,040 |

(இ) வரமான, செலவினக் கூற்றில் காட்டப்பட்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கூற்றில் காட்டப்பட்ட நெறொத்த தொகை என்பவற்றிற்கிடையில் ரூபா 2,587,166 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க நல்லாட்சிக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் சுற்றுநிருபம்**

(i) சுற்றுநிருபத்தின் 6 அம் அத்தியாயத்தின் 6.5.1. ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்கிடையில் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை 2011 ஓகத்து 26 அன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மனித வளங்களின் முகாமைத்துவம் தொடர்பாக சகல விடயங்களிற்குமான விதிகள் மற்றும் பிரமாணங்களை வழங்கும் மனிதவள முகாமைத்துவம் என்ற அத்தியாயத்துடன் நடைமுறைகள் கைநூலில், சுற்றுநிருபத்தின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரிச் செயலாளரின் ஒத்திசைவுடன் சேர்த்து சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டிய போதிலும், அதிகாரசபை அந்த வேண்டுகையுடன் இணங்கத் தவறியிருந்தது.

(ஆ) 2006 மார்ச் 01 ஆம் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றுநிருபத்தின் 4.2.1 மற்றும் 8.12 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கொள்வனவுத் திட்டத்தை தயாரித்தல், பெறுமதிசேர்வரிக்கு பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் என்பன ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்ட பின்னர் அடுத்துவரும் 15 ஆம் நாளோ அல்லது அதற்கு முன்னரோ கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமென்பதுடன் இணங்கியிருக்கவில்லை.

(இ) 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் மற்றும் 2008 யூலை 28 ஆம் திகதிய பீஈடி/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் என்பவற்றில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு முரணாக அலுவலக பாவனைக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களை வைத்திருக்கின்ற அலுவலர்களால் குழாமிலுள்ள வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. உதாரணமாக, இது சம்பந்தமாக நடாத்தப்பட்ட மாதிரிப் பரிசோதனையின்படி, ஒதுக்கப்பட்ட வாகனங்களை வைத்திருக்கின்ற சில உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் 3 மாத காலத்தில் 13 சந்தர்ப்பங்களில் குழாமிலுள்ள வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளமை வெளிப்பட்டது.

(ஈ) அதிகாரசபைக்கு வாகனங்களைக் குத்தகை கொடுப்பதற்குப் பதிலாக குத்தகை உடன்படிக்கைகளின் அடிப்படையில் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் ஐந்து வாகனங்கள் பெறப்பட்டிருந்தன. மேலும், 2004 ஓகத்து 31 ஆம் திகதிய 353(ஏ) ஆம் இலக்க அரச நிதி சுற்று நிருபம், 2005 சனவரி 31 ஆம திகதிய பீஈடி/28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 2008 மார்ச் 24 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் ஆகியவைகளிலுள்ள அறிவுறுத்துரைகளின் வேண்டுகைகளைப்பின்பற்றாமலும் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் 120 லீற்றர் என்ற

எரிபொருள் எல்லையை விஞ்சி 500 லீற்றர்கள் வரைக்கும் எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், ரூபா 1,080,000 பெறுமதியான மேலதிக 9000 லீற்றர் எரிபொருள் மீளாய்வாண்டு இறுதி வரையான 10 மாத காலத்தில் பெறப்பட்டிருந்தன.

(உ) நிதிப்பிரமாணம் 454 இல் கொடுக்கப்பட்ட படிவத்தின் படி பொருளிருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆட்சேர்ப்பு, இடமாற்றங்கள், சம்பளத்திருத்தங்கள் போன்றவறான மனிதவள முகாமைத்துவம் தொடர்பான அதிகாரசபையால் வழங்கப்பட்ட கடிதங்களின் பிரதிகள், தாபன விதிக்கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் 10.2 அம் பிரிவிலுள்ள அறிவுறுத்துரைகளின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.8 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 19,778,513 கூட்டுமொத்தத் தொகையான கணக்குகளிலுள்ள 14 விடயங்களை, ஆதார ஆவணங்கள், வாடகை உடன்படிக்கைகள் போன்ற சான்றுகளின்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா. 65,244,624 ஆன மிகையை முன்னைய ஆண்டிற்கான ரூபா. 60,625,182 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் அது நிதிசார் விளைவுகளில் ரூபா. 4,619,442 ஆன அதிகரிப்பைக் காட்டியது. சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கப்பல்/விமானம் ஏறும் வரி ரூபா 37,460,451 ஆல் அதிகரித்தமை நிதிசர் விளைவுகளின் அதிகரிப்பிற்கான பிரதான காணமாகும்.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 2.2.1 சுற்றுலா விடுதிகளின் தொழிற்பாடு

---------------------------------------------------------

அதிகாரசபையின் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் 07 சுற்றுலா விடுதிகள் இருந்தன. மீளாய்வாண்டிற்கான சுற்றுலா விடுதிகளின் ரூபா 115,600 ஆன தேறிய திரண்ட மிகையை 2009 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,407,975 ஆன மிகையுடன் ஒப்பிடலாம். மூன்று சுற்றுலா விடுதிகளைத் தவிர, ஏனையவை அபரிமிதமான மேந்தலைகள் காரணமாக நட்டத்தை ஏற்படுத்துபவையாக செயற்பட்டிருந்தன. அதன் விளைவாக, சுற்றுலா விடுதிகளின் தொழிற்பாட்டின் ஒட்டுமொத்த இலாபத்தன்மை உருவாக்கப்பட்ட மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் 0.14% ஆக மாத்திரமே இருந்தது.

### 2.2.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------------

ஊழியர்களிடமிருந்து வரவேண்டிய மற்றும் சுற்றுலா வீடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய வரி ஆகியன தொடர்பான ரூபா 901,258 தொகையான கிடைக்க வேண்டியவைகள் மீளாய்வாண்டில் அறவிடமுடியாத கடன்களாக கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தன.

### 2.2.3 கற்பிட்டி ஒருங்கிணைக்கப்பட்ட சுற்றுலா விடுதி செயற்திட்டம்

-----------------------------------------------------------------------------------------------------

புதிய சுற்றுலா தேவையை உருவாக்குவதற்காக பிரத்தியேகமான சுற்றுலா விடுதியை அபிவிருத்தி செய்வது இந்தச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். 15,000 நேரடி வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் 50,000 ஆன நேரில் வேலை வாய்புக்களை உருவாக்குதல் மற்றும் பிராந்திய சமுதாயத்தின் வாழ்வியல் நிலையை விருத்தி செய்தல் இரண்டாம் நிலை நோக்கங்களாகும். செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கான அங்கீகாரம் 2008 இல் அமைச்சரவை மற்றும் திறைசேரியின் தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் என்பவற்றிடமிருந்து பெறப்பட்டது. தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம், உள்நாட்டு நிதியளிப்பு செயற்திட்டமாக அமைச்சரவை அனுமதி என்ற நிபந்தனைக்கிணங்க செஸ் நிதியத்திலிருந்து நிதிகளைப் பெறுவதற்கும் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்காகவும் வழங்கப்பட்டது. மேலும், செயற்திட்ட பதவியணியாக 08 ஊழியர்களை நியமிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டது. இவை சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு இறுதிவரை இனங்காணப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 72.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டது.

(ஆ) அதிகாரசபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் மற்றும் இலங்கை மகாநாட்டுப் பணியகம் என்பவற்றால் செஸ் நிதியத்திலிருந்து இந்த நிறுவனங்களிற்கு ஒதுக்கப்பட்ட நிதிகளில் ரூபா 80 மில்லியன் தொகை செயற்திட்டத்திற்கான பங்களிப்பு செய்யப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட முகாமைத்துவ செலவுகள், உசாத்துணை மற்றும் மூலதன வேலைகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு செயற்திட்ட அமுலாக்கல் திட்டம் மற்றும் விபரமான பாதீடு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இந்தச் செயற்திட்டம் செஸ் நிதியத்திலிருந்து நிதியளிக்கப்பட்டிருந்தபோதிலும், 2007 ஏப்ரல் 05 ஆம திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 4.2.4 ஆம் பிரிவின்படி, திறைசேரி அனுமதி இன்றி அல்லது வெளிநாட்டு கொடையாளருடனான கடன்உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் ஐ.அ.டொலர் 30 மில்லியனிற்கு மேற்பட்ட வெளிநாட்டு நிதியளிக்கப்படும் செயற்திட்டமாக இந்த செயற்திட்டத்தைக் கருதி, செயற்திட்டப் பதவியினர் சம்பளங்கள் மற்றும் படிகளைப் பெற்றிருந்தனா.

(உ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, குத்தகை உடன்படிக்கைளில் அபிவிருத்தியாளர்களிற்கு வெல்லை மற்றும் இப்பான் தீவு ஆகிய இரண்டு தீவுகள் மாற்றப்பட்டிருந்தன. எனினும், காணி மதிப்பீடு மற்றும் அபிவிருத்தியாளரின் தெரிவு அடிப்படை என்பன தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி. அதிகாரசபையின் ஊழியர்களின் எண்ணிக்கை 16 சேவை வகைகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முறையே 157 மறறும் 162 எண்ணிக்கையான ஊழியர்களிருந்தனர். ஊழியர்களின் சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய படிகளாக அதிகாரசபையால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் முறையே ரூபா 48.8 மில்லியனான மற்றும் ரூபா 43.4 மில்லியனான தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

ஆகையால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான ஒரு ஊழியருக்கான கிரயம் முறையே ரூபா 301,235 மற்றும் ரூபா 276,433 ஆக இருந்தது.

### 2.2.5 வாகனங்களின் பயன்பாடு

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எரிபொருள், பராமரிப்புக் கிரயங்கள் முதலிய வாகனங்களின் பயன்பாடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை. அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்தங்களிற்காக ரூபா 6,468,652 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அதற்கு மேலாக, வாகனங்களின் வாடகையாக ரூபா 6.035,408 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்ட வாடகை வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் பிரயாணம் செய்த தூரம் ஒரு கிலோ மீற்றருக்கான ஓட்டக் கிரயம் முதலியன தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கூட்டுத்திட்டம்

------------------------

2010 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரைக்குமான அதிகாரசபையின் கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மேற்படி திட்டத்தைத் திருத்தி 2011 தொடக்கம் 2013 வரைக்குமான ஒரு புதிய திட்டம் மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், கூட்டுத்திட்டத்தின் வழிகாட்டலைப் பின்பற்றாது சில பிரதான நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டிருந்தன. உதாரணமாக கூட்டுத்திட்டம் மற்றும் ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றில் காட்டப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் ஒரு கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்களிற்காக ரூபா 132.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் மூலதனச் செலவினத்திற்கான ஒரு விபரமான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக புள்ளிவிபர அளவைகள் மற்றும்தரவு செயன்முறைப்படுத்தல் என்பவற்றின் உண்மையான செலவினம் அவற்றிற்கான பாதீட்டுச் செலவினத்துடன் ஒப்பிடும்போது முறையே 90% மற்றும் 100% ஆல் விஞ்சியிருந்தன. ஆகையால் அவை பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக்காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------------

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) காணி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கல்
(இ) செயற்திட்ட முகாமைத்துவம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கிடைக்க வேண்டியவைகள் மற்றும் பெறவேண்டியவைகள்
(ஊ) முற்பணங்களின் கொடுப்பனவு